## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*[1988, திசெம்பர் 07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1988, திசெம்பர் மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 — தபாற் செலவு : சதம் 75

1988 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[1988, திசெம்பர் மாதம் 07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ. 2/85

வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டமானது, 1988 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும், 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(5) தொழில்தருநர் எவரும் எவரேனும் வேலையாளினது அட்டவணைப்படுத்திய ஊழியத்தை ஒழுக்காற்று நடவடிக்கையென்ற வகையில் விதிக்கப்பட்ட தண்டனை காரணமாக முடிவுறுத்துமிடத்து, அத்தொழில்தருநர், ஊழியத்தை முடிவுறுத்தலுக்கான காரணங்களை, அத்தகைய முடிவுறுத்தல் தேதியின் பின்னரான இரண்டாவது வேலை நாள் முடிவடையுமுன்னர் அத்தகைய வேலையாளுக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "ஓராண்டுக்குக் குறைந்தவொரு காலத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பின்வருவன உட்பட, அதாவது—

(i) தொழில்தருநரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஏதுவின்மீது வருகைதராத நாளொவ்வொன்றும் ;

(ii) வேலையாளின் ஊழியத்திலிருந்தும் ஊழியத்தின்போதும் எழுகின்ற விபத்தொன்றினால் வேலையாளுக்கு விளைகின்ற ஏதேனும் ஊறின் காரணமாக வருகைதராத நாளொவ்வொன்றும் ;

(iii) அடைப்பான் காரணமாக அல்லது (139 ஆம் அத்தியாயமான) வேலையாட்கள் நட்டஈட்டுக் கட்டளைச்சட்டத்தின் III ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தான்புரி தொழில்சார் நோயின் காரணமாக வருகைதராத நாளொவ்வொன்றும் ;

(iv) தொழில்தருநர், வேலையாளுக்கு வேலையை ஏற்பாடு செய்யத் தவறுகின்ற நாளொவ்வொன்றும் ;

(V) அத்தகைய நாட்கள் கூட்டு மொத்தமாக முப்பது நாட்களை விஞ்சாதிருப்பின், கதவடைப்பொன்று காரணமாக, அல்லது சட்ட விரோதமாகவிராத வேலைநிறுத்தமொன்று காரணமாக வருகை தராத நாளொவ்வொன்றும்; அத்துடன்

(vi) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளினால் அல்லது அவற்றின்கீழ் வேலையாளொருவர் உரித்துடையவராகவுள்ள விடுமுறைநாள் ஒவ்வொன்றும் அல்லது வேலைக்கு வருகைதராத நாளொவ்வொன்றும்,

என்பன உட்பட பன்னிரெண்டு மாதங்களைக் கொண்ட தொடர்ச்சியான காலப்பகுதியொன்றில் அத்தகைய முடிவுறுத்துகை இடம்பெற்றால், அப் பன்னிரெண்டு மாத காலப்பகுதியில் நூற்றியெண்பது நாட்களுக்குக் குறைவானால் ஏற்புடையதாதலாகாது; அல்லது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 6ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச் சட்டவாக்கத்தின் 6ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"விண்ணப்பம் செய்யப்பட்டதிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் கட்டளையெதுவும் ஆக்கப்படாதிருத்தலும் வேறு சட்டப்படியான நிவாரணத்தைத் தேடுவதற்கு வேலையாட்களுக்குள்ள உரிமைகளும்.

6ஆ. (1) வேலையாளொருவரினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைப் பின்பற்றி, அத்தகைய விண்ணப்பம் தொடர்புபடுத்தும் முடிவுறுத்தலிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தாலொழிய, 6 ஆம் பிரிவின்கீழ் அல்லது 6அ என்னும் பிரிவின்கீழ் ஆணையாளரால் கட்டளையெதுவும் ஆக்கப்படுதல் ஆகாது.

(2) இச்சட்டத்திலுள்ளதெதுவும், இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவையோ அல்லது 5 ஆம் பிரிவையோ அல்லது எவ்வேலையாளின் ஊழியம் முடிவுறுத்தப்பட்டிருக்கின்றதோ அவ்வேலையாளொருவர் அத்தகைய முடிவுறுத்தல் தொடர்பில் வேறேதேனும் சட்டப்படியான நிவாரணத்துக்காக விண்ணப்பிக்கும் உரிமைகளையோ பாதிப்பதாக, அல்லது அத்தகைய முடிவுறுத்தல் தொடர்பில் நிவாரணம் அளிப்பதற்கு ஏதேனும் நீதிமன்றத்தின், நியாயசபையின் அல்லது நிறுவனத்தின் நியாயாதிக்கத்தைப் பாதிப்பதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "6 ஆம் பிரிவின் அல்லது 6அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு" என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலம்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "6 ஆம் பிரிவின் அல்லது 6அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆ) (i) தவறுனது 6 ஆம் பிரிவின்கீழான கட்டளைக்கு இணங்கியொழுகாமையுடன் தொடர்புடையதாகவுள்ள ஏதேனும் விடயத்தில், அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கூலிகளையும் நலன்களையும், அத்துடன் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று தொடங்குகின்றதும், அத்தகைய தொழில்தருநர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கு அவர் ஊழியத்திலிருந்திருப்பின், அவருக்குக் கொடுபடற்பாலனவாகவிருந்திருக்கும் கூலிகளையும், நலன்களையும், வேலையாளுக்குக் கொடுக்க ஆளாதல் வேண்டும் ; அல்லது

(ii) தவறுனது, 6அ என்னும் பிரிவின்கீழான கட்டளைக்கு இணங்கியொழுகாமையுடன் தொடர்புடையதாகவுள்ள ஏதேனும் விடயத்தில் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையை வேலையாளுக்குக் கொடுக்க ஆளாதல் வேண்டும்.".